என்று கேட்டதற்கு, அவர்கள், இவ்வளவு நாட்கள் காளைகளுக்கு வைக்கோல், தீனிகள் போட்டவகைக்குச் சரியாகப் போய்விட்டது என்று கூறிவிட்டார்கள் என்று சொல்லப்படுவது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் சொல்லுகின்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால், எந்த ஆண்டில் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டன என்கிற விவரம் கண்டு, அது பற்றி கருத்து அளிக்கப்படலாம்.

திரு. டி. மார்டின் : அவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு பொறுப்பேற்ற பிறகு வாங்கிய காளைகள் எவ்வளவு, எந்த எந்த கால்நடை பண்ணைகளில் வாங்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. தோ. மு. நல்லசாமி : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன விடையிலிருந்து, ஏற்கெனவே அவர்கள் குறிப்பிட்ட விலைகள் அப்பொழுது இருந்த நிலவரத்திலும் அதிகப்படியான விலையாகத் தோன்றவில்லை. இன்றைக்கும், பெரிய பண்ணை வைத்து நல்ல முறையில் வளர்க்கிறவர்களுக்கு அப்படிப் பட்ட விலை கொடுப்பதில் என்ன தவறு என்பதைத் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பழையகோட்டைப் பண்ணையிலிருந்து வாங்கியது அதிக விலையா, குறைந்த விலையா என்பதைப்பற்றி நான் எடுத்துச் சொல்லவில்லை ; அது என்னுடைய பதிலிலிருந்து அறிந்துக்கொள்ள முடியாது. இரண்டாவதாக, முன்பே ஒரு கேள்விக்குப் பதில் சொன்னது போல, எந்தப் பண்ணையாக இருந்தாலும், பழைய கோட்டை பண்ணையானாலும், தனியார் பண்ணையானாலும், தரமான காளைகளாக இருந்தால் அவற்றின் விலையை நிர்ணயம் செய்து, வாங்கப்படும். குறிப்பிட்ட பண்ணையிலிருந்து வாங்கக் கூடாது என்றோ, அல்லது வாங்க வேண்டும் என்றோ விதி எதுவும் கிடையாது.

சாக்கடை அமைப்புத் திட்டங்கள்

***116 வின.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர மன்றம் பாதாள சாக்கடை திட்டத்தை நிறைவேற்ற அரசிடம் கடனோ, மானியமோ கோரியுள்ளதா ?

(இ) இதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் நகரம் ஏறத்தாழ 125,000 மக்கட் தொகை கொண்ட பெரிய நகரமாக இருப்பதாலும், நாளொன்றுக்கு இருபதாயிரத்துக்கும் அதிகமாக மக்கள் அங்கு வந்து போவதாலும், அந்நகரத்தின் சுகாதார வசதி கெடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, விரைவில் அந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அத்தகைய திட்டத்திற்கு நகர மன்றத்திலிருந்து யாதொரு கோரிக்கையும் அரசாங்கத்திற்கு வரவில்லை. அப்படிக் கோரிக்கை வரும் நேரத்தில் கவனிக்கப்படும்.